# வகுப்பு - 10

## இயல் - 1

## கவிதைப்பேழை

### அன்னை மொழியே

**பலவுள் தெரிக**

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை: இ) எம் + தமிழ் + நா**

2. **'மன்னும் சிலம்பே ! மணிமேகலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"**

இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

- ❖ **சீவக சிந்தாமணி,**
- ❖ **வளையாபதி,**
- ❖ **குண்டலகேசி**

இவை யாவும் எஞ்சிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

**சிறுவினா**

1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக?

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | : | துரை. மாணிக்கம் |
| ஊர் | : | சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் |
| பெற்றோர் | : | துரைசாமி, குஞ்சம்மாள் |
| இயற்றிய நூல்கள் | : | கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம், எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி |
| சிறப்பு | : | இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது. |
| காலம் | : | 10.03.1933 முதல் 11.06.1995 வரை |

Next Generation School



Created by Pinkz

2. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**“அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!“**

- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

“முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும் பெருஞ் சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

**அறிமுக உரை:**

**தாயே! தமிழே! வணக்கம்.**
**தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்.**

என்று தமிழ்த்தாயை வணங்கி, இங்கு மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் பாடலையும் ஒப்பிட்டுக் காண்போம்.

| சுந்தரனார் | பெருஞ்சித்திரனார் |
|---|---|
| நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பெண்ணாக பூமியையும்,<br>பாரதத்தை முகமாகவும், பிறை போன்ற நெற்றியாகவும்,<br>நெற்றியில் இட்ட பொட்டாக தமிழும் தமிழின் மணம் எத்திசையும் வீசுமாறு உருவகப்படுத்திப் பாடியுள்ளார் சுந்தரனார். | குமரிக்கண்டத்தில் நின்று நிலைபெற்ற மண்ணுலகம் போற்ற வாழ்ந்த பேரரசியே!<br>பழமைக்கும் பழமையானவளே!<br>பாண்டியனின் மகளே! திருக்குறளின் புகழே!<br>பாட்டும் தொகையே! கீழ்க்கணக்கே! சிலம்பே!<br>மேகலையே! என்று பெருஞ்சித்திரனார் தமிழை முடிதாழ வணங்கி வாழ்த்துகிறார். |
| “நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்.....” | “அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!” |

**நிறைவுரை:**

இருவருமே தமிழின் பெருமையைத் தம் பாடல்களில் பூட்டி, காலந்தோறும் பேசும்படியாக அழகுற அமைத்துப் பாடியுள்ளனர்.

**இலக்கணக்குறிப்பு**

செந்தமிழ், நறுங்கனி, பேரரசு, செந்தாமரை - பண்புத்தொகைகள்
பாடி, குடித்து - வினையெச்சங்கள்

**பகுபத உறுப்பிலக்கணம்**

**முகிழ்த்த – முகிழ் + த் + த் + அ**

| | | |
|---|---|---|
| முகிழ் | - | பகுதி |
| த | - | சந்தி |
| த | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

**கூடுதல் வினாக்கள்**

**பலவுள் தெரிக**

1. **ஐம்பெருங்காப்பியங்களுள் பொருந்தாததைத் தேர்க.**
   அ) யசோதர காவியம் ஆ) சிலப்பதிகாரம்
   இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி

   **விடை : அ) யசோதர காவியம்**
2. **உள்ளத்தில் கனல் மூள செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடியது எது?**
   அ) தேன்சிட்டு ஆ) வண்டு இ) தேனீ ஈ) வண்ணத்துப்பூச்சி
   **விடை : ஆ) வண்டு**
3. **“அன்னை மொழியே“ என்ற கவிதையில் இடம்பெறும் மூவேந்தருள் ஒருவர்**
   அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
   **விடை : இ) பாண்டியன்**
4. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
   அ) பாவியக்கொத்து ஆ) நூறாசிரியம்
   இ) தென்தமிழ் ஈ) பள்ளிப்பறவைகள்
   **விடை: இ) தென்தமிழ்**
5. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
   அ) தமிழ்ச்சிட்டு ஆ) பள்ளிப்பறவைகள்
   இ) எண்சுவை எண்பது ஈ) உலகியல் நூறு
   **விடை: அ) தமிழ்ச்சிட்டு**

6. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. மாண்புகழ் | - | அ) சிலப்பதிகாரம் |
| 2. மன்னும் | - | ஆ) திருக்குறள் |
| 3. வடிவு | - | இ) பத்துப்பாட்டு |
| 4. பாப்பத்தே | - | ஈ) மணிமேகலை |

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ
இ) 1.ஆ 2.இ 3.ஈ 4.அ ஈ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ

(விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ)

7. 'அன்னை மொழியே' கவிதை இடம் பெறும் நூல்
அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை எண்பது ஈ) பாவியக்கொத்து

(விடை: ஆ) கனிச்சாறு)

8. "முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே" - என்று பாடியவர்
அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

(விடை: அ) பெருஞ்சித்திரனார்)

9. "முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே" - என்று பாடியவர்
அ) க. சச்சிதானந்தன் ஆ) துரை. மாணிக்கம்
இ) வாணிதாசன் ஈ) முடியரசன்
(விடை: ஆ) துரை. மாணிக்கம்)

10. "நற்கணக்கே" என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை?
அ) 18 ஆ) 10 இ) 8 ஈ) 5

(விடை: அ) 18)

11. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!" எஞ்சியுள்ள பெருங்காப்பியங்கள் எத்தனை?
அ) ஐந்து ஆ) மூன்று இ) இரண்டு ஈ) எட்டு

(விடை: ஆ) மூன்று)

12. துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெரியவன்கவிராயர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) தமிழண்ணல்

(விடை: அ) பெருஞ்சித்திரனார்)

13. பெருஞ்சித்திரனார் பாடலில் 'பழமைக்குப் பழமை' என்னும் பொருள் தரும் சொல்.
அ) முன்னை முகிழ்ந்த ஆ) முன்னைக்கும் முன்னை
இ) முன்னும் நினைவால் ஈ) முந்துற்றோம் யாண்டும்
(விடை: ஆ) முன்னைக்கும் முன்னை)

14. ‘பாப்பத்தே எண் தொகையே‘ - சரியான பொருளைக் கண்டறி.

அ) பாடல் பத்து, எண் தொகை ஆ) பா பத்து, எட்டுத் தொகை

இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) பத்தும் எட்டும்

**(விடை: இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை)**

15. பெருஞ்சித்திரனாரின் ‘முந்துற்றோம் யாண்டும்’, தமிழ்த்தாய் வாழ்த்து‘ என்னும் இரு தலைப்பிலுள்ள பாடல்கள் எத்தொகுப்பிலிருந்து எடுத்தாளப் பெற்றன,

அ) எண்சுவை எண்பது ஆ) உலகியல் நூறு

இ) நூறாசிரியம் ஈ) கனிச்சாறு

**(விடை: ஈ) கனிச்சாறு)**

16. செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அது போல - பயின்று வரும் அணி

அ) உவமையணி ஆ) உருவகஅணி

இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) தற்குறிப்பேற்றணி

**(விடை: அ) உவமையணி)**

17. செந்தமிழ் - பிரித்து எழுதுக.

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்

இ) செ + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

**(விடை: ஈ) செம்மை + தமிழ்)**

18. செந்தமிழ், செந்தாமரை ஆகிய சொற்களில் இடம் பெறும் இலக்கணக் குறிப்பைச் சுட்டுக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத் தொகை ஈ) அன்மொழித்தொகை

**(விடை: அ) பண்புத்தொகை)**

19. உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூள - இவ்வடியில் காணும் நயம்

அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு

**(விடை: அ) மோனை)**

20. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே
மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
இப்பாடலில் அமைந்த எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

அ) தென்னன் ஆ) மன்னும் இ) இன்னறும் ஈ) இவையனைத்தும்

**(விடை: ஈ) இவையனைத்தும்)**

21. ‘அன்னை மொழியே’ என்னும் தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்

அ) சுந்தரனார் ஆ) பாரதிதாசன் இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாவாணர்

**(விடை: இ) பெருஞ்சித்திரனார் )**


Created by Pinkz

22. “சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்” என்று பாடியவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) பெருஞ்சித்திரனார்

இ) சச்சிதானந்தன் ஈ) ஆறுமுகநாவலர்

**(விடை: இ) சச்சிதானந்தன்)**

23. பெருஞ்சித்திரனாரின் பணிகளில் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது?

அ) பாவியக்கொத்து ஆ) கனிச்சாறு

இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை ஈ) உலகியல் நூறு

**(விடை: இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை)**

24. தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களின் ஆசிரியர் யார்?

அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன் இ) பெருஞ்சித்திரனார் ஈ) திரு.வி.க

**(விடை: இ) பெருஞ்சித்திரனார்)**

## பாடம் - 2

## உரைநடை உலகம்

## தமிழ்ச்சொல் வளம்

### பலவுள் தெரிக

1. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை : ஈ) சருகும் சண்டும்**

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**விடை : ஆ) மணி வகை**

Next Generation School

## குறுவினா

1. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன**
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

| சரியான தொடர்கள் | பிழையான தொடர் |
|---|---|
| ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன<br>ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன | ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன<br>பிழைக்கான காரணம் :<br>தாறு – வாழைக்குலை<br>சீப்பு – வாழைத்தாற்றின் பகுதி |

## சிறுவினா

1. **'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'**
**இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க**

பிள்ளை - தென்னம்பிள்ளை வாங்கிவந்தேன்

வடலி - காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்

நாற்று - நெல் நாற்று நட்டேன்

கன்று - வாழைக்கன்றை நட்டேன்

பைங்கூழ் - சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது

## நெடுவினா

1. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| அறிமுகவுரை<br>சொல்வளம்<br>சொல்லாக்கத்திற்கான தேவை<br>நிறைவுரை |

**அறிமுகவுரை:**

வணக்கம் ! அன்னைமொழியெ! அழகார்ந்த செந்தமிழே! எனப் போற்றப்படும் தமிழ்மொழி பிறமொழிகளுக்கெல்லாம் தலைச்சிறந்த மொழியாகும். அம்மொழியின் சொல்வளத்தைப் பற்றிக் காண்போம்.

**சொல்வளம்:**

- இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
- தமிழ்ச்சொல்வளத்தைப் பல துறைகளிலும் காணலாம்.
- ஒரு பொருட் பல சொல் வரிசைகள் தமிழைத் தவிர எந்தத் திராவிட மொழிகளின் அகராதிகளிலும் காணப்படவில்லை
- “பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள” என்கிறார் கால்டுவெல்.

**சொல்லாக்கத்திற்கான தேவை:**

- சொல்லாக்கத்திற்கான தேவை என்பது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது.
- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ப நூல்களைப் புதிய சொல்லாக்கத்துடன் படைத்தல் வேண்டும்.
- இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும், புதிய சொல்லாக்கம் தேவை.
- மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும்.
- தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
- உலகின் பிற ஆய்வுச்சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும்போதும் பிறமொழி அறியாத தமிழரும் அவற்றைக் குறித்து அறிந்து கொள்ளமுடியும்.
- மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி அதை நிலை நாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.
- பிற மொழிச் சொற்கள் கலவாமல் இருக்க காலத்திற்கேற்ப புதிய கலைச்சொல்லாக்கம் ஏற்படுத்த வேண்டும்.

**நிறைவுரை :**

மென்மையான தமிழை மேன்மையான தமிழாக்க அறிவியல் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்குக் கொண்டு செல்வோம்.


Created by Pinkz

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலையைக் குறிக்கும் சொல் எது ?

அ) அரும்பு ஆ) மலர் இ) வீ ஈ) செம்மல்

**விடை : இ) வீ**

2. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?

அ) பாவாணர் ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு. வி. க.

**விடை : ஆ) கால்டுவெல்**

3. திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் எது?

அ) அல்லூர் ஆ) திருவள்ளுர்
இ) கல்லூர் ஈ) நெல்லூர்

**விடை : அ) அல்லூர்**

4. குச்சியின் பிரிவு எச்சொல்லால் அழைக்கப்படுகிறது?

அ) போத்து ஆ) குச்சி
இ) இணுக்கு ஈ) சினை

**விடை : இ) இணுக்கு**

5. பொருத்துக.

1. தாள் - அ) குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
2. தண்டு - ஆ) நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
3. கோல் - இ) தண்டு, கீரை முதலியவற்றின் அடி
4. தூறு - ஈ) நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி

அ) 1.ஈ 2. இ 3. ஆ 4. அ ஆ) 1.ஆ 2. அ 3. அ 4. அ
இ) 1. இ 2. ஈ 3. அ 4. ஆ ஈ) 1. ஆ 2. இ 3. ஆ 4. ஈ

**விடை : அ) 1.ஈ 2. இ 3. ஆ 4. அ**

6. பொருத்துக.

1. தட்டு - அ) கரும்பின் அடி
2. கழி - ஆ) புளி, வேம்பு முதலியவற்றின் அடி
3. கழை - இ) கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
4. அடி - ஈ) மூங்கிலின் அடி

அ) 1.ஆ 2. அ 3. ஈ 4. இ ஆ) 1.இ 2. அ 3. ஈ 4. ஆ
இ) 1. ஈ 2. இ 3. அ 4. ஆ ஈ) 1. இ 2. அ 3. ஆ 4. ஈ

**விடை : அ) 1. ஆ 2.அ 3. ஈ 4.**

7. பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) தாறு ஆ) கழி இ) கழை ஈ) கவை

**விடை : கவை**


Created by Pinkz

8. பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) தாள் ஆ) தண்டு இ) கிளை ஈ) கோல்

**விடை : கிளை**

9. பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) கவை ஆ) தட்டு இ) கொம்பு ஈ) சினை

**விடை : ஆ) தட்டு**

11. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) கவை - குச்சியின் பிரிவு
ஆ) கொம்பு - கவையின் பிரிவு
இ) போத்து - சினையின் பிரிவு
ஈ) அடி - போத்தின் பிரிவு

**விடை : அ) கவை - குச்சியின் பிரிவு**

12. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.

அ) தாள், தண்டு, கோல், தாறு ஆ) கவை, கொம்பு, கிளை, சினை
இ) சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை ஈ) கழி, குச்சு, இணுக்கு, கழை

**விடை :ஈ) கழி, குச்சு, இணுக்கு, கழை**

13. பொருத்துக.

1. இலை - அ) தென்னை, பனை முதலியவற்றின் இலை
2. தாள் - ஆ) சோளம், கம்பு முதலியவற்றின் இலை
3. தோகை - இ) புளி, வேம்பு முதலியவற்றின் இலை
4. ஓலை - ஈ) நெல், புல் முதலியவற்றின் இலை

அ) 1.ஈ 2. இ 3. அ 4. ஆ ஆ) 1.இ 2. ஈ 3. ஆ 4. அ
இ) 1. ஆ 2. அ 3. ஈ 4. இ ஈ) 1. இ 2. ஈ 3. அ 4. ஆ

**விடை : ஆ) 1.இ 2. ஈ 3. ஆ 4. அ**

14. பொருத்தமற்ற ஒன்றைக் கண்டறிக.

அ) சண்டு ஆ) சருகு இ) தோகை ஈ) கட்டை

**விடை : ஈ) கட்டை**

15. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
ஆ) சருகு - காய்ந்த இலை
இ) தாள் - புளி, வேம்பு முதலியவற்றின் இலை
ஈ) தோகை - சோளம், கம்பு முதலியவற்றின் இலை

**விடை : இ) தாள் - புளி, வேம்பு முதலியவற்றின் இலை**

12. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.

அ) தோகை, ஓலை, சண்டு, சருகு
ஆ) துளிர், முறி, கொழுந்து, கொழுந்தாடை
இ) பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, கவ்வை
ஈ) கருக்கல், கச்சல், கொத்து, குலை

**விடை : ஈ) கருக்கல், கச்சல், கொத்து, குலை**

13. தும்பி - இச்சொல்லின் பொருள்

அ) தும்பிக்கை ஆ) வண்டு இ) துந்துபி ஈ) துன்பம்

**விடை : ஆ) வண்டு**

14. தாவரங்களில் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களுள் - சரியானவற்றைத் தேர்ந்தெடு.

அ) இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு

ஆ) இலை, தோகை, தாள், தளிர், குருத்து, அரும்பு

இ) தாள், தோகை, தூறு, தட்டு, தண்டு, ஓலை

ஈ) இலை, தாள், ஓலை, தளிர், கொழுந்து, சண்டு

**விடை : அ) இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு**

19. **'நாடும், மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர் யார்?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) பெருஞ்சித்திரனார் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை :அ) பாரதியார்**

*20. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?*

அ) தேவநேயப் பாவாணர் ஆ) இளங்குமரனார்

இ) திரு.வி.க. ஈ) மறைமலையடிகள்

**விடை: ஆ) இளங்குமரனார்**

21. பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர் யார்?

அ) தேவநேயப் பாவாணர் ஆ) இளங்குமரனார்

இ) திரு.வி.க. ஈ) மறைமலையடிகள்

**விடை: ஆ) இளங்குமரனார்**

22. தமிழ்வழித்திருமணங்களை நடத்தி வருபவர் யார்?

அ) தேவநேயப் பாவாணர் ஆ) பெருஞ்சித்திரனார்

இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார்

**விடை: இளங்குமரனார்**

23. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் யார் ?

அ) ஜி. யு.போப் ஆ) வீரமாமுனிவர்

இ) இளங்குமரனார் ஈ) பெருங்குமரனார்

**விடை: இ) இளங்குமரனார்**

24. இளங்குமரனார் யார் போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்?

அ. திரு. வி .க. ஆ) பாவாணர் இ) மு.வ. ஈ. ஜீவா

**விடை: ஆ) திரு. வி .க**

25. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்?

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்

இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா. இளங்குமரனார்

**விடை : ஈ) இரா. இளங்குமரனார்**

26. விழிகளை மூடியபடி எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்கள்

அ) திரு.வி.க., இளங்குமரனார்

ஆ) தமிழழகனார், அப்பாத்துரையார்

இ) தேவநேயப் பாவாணர், கால்டுவெல்

ஈ) பெருஞ்சித்திரானார், சுந்தரனார்

**விடை: அ) திரு.வி.க., இளங்குமரனார்**

27. **'தமிழ்த்தென்றல்' என்று போற்றப்பட்டவர் யார்?**

அ) இளங்குமரனார் ஆ) பெருந்தேவனார்

இ) திரு.வி.க., ஈ) ம.பொ.சி

**விடை : இ) திரு.வி.க.,**

28. **உலகிலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?** மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே என்று கூறியவர் யார்?

அ) மலேசியா, க. அப்பாத்துரையார் ஆ). சிங்கப்பூர், தேவநேயப் பாவாணர்

இ) இந்தியா. இளங்குமரனார் ஈ) கனடா, ஜி.யு.போப்

**விடை : அ) மலேசியா, க. அப்பாத்துரையார்**

29. **'பன்மொழிப்புலவர்' என்றழைக்கப்பட்டவர் யார்?**

அ) க. அப்பாத்துரையார் ஆ. தேவநேயப் பாவாணர்

இ) இளங்குமரனார் ஈ) ஜி.யு.போப்

**விடை : ஆ. தேவநேயப் பாவாணர்**

30.**சம்பா நெல்லின் உள்வகைகள் எத்தனை?**

அ) 30 ஆ) 60 இ) 40 ஈ) 80

**விடை : ஆ) 60**

31. **'மொழி ஞாயிறு' என்றழைக்கப்பட்டவர் யார்?**

அ) க. அப்பாத்துரையார் ஆ. தேவநேயப் பாவாணர்

இ) இளங்குமரனார் ஈ) ஜி.யு.போப்

**விடை : ஆ. தேவநேயப் பாவாணர்**

32. **'தமிழ்ச்சொல்வளம்' என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ள நூல் எது?**

அ) சொல்லாய்வுக் கட்டுரைகள் தேவநேயப் பாவாணர்

ஆ) தேவநேயம் இளங்குமரனார்

இ) மொழி மரபு, மு.வ. ஈ) ஆய்வில் நெறிமுறைகள், பொற்கோ

**விடை : அ) சொல்லாய்வுக் கட்டுரைகள் தேவநேயப் பாவாணர்**

33. **பொருத்திக் காட்டுக :**

i) சுள்ளி - 1. காய்ந்த குச்சு (குச்சி)

ii) விறகு - 2. காய்ந்த சிறுகிளை

iii) வெங்கழி - 3. காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

iv) கட்டை - 4. காய்ந்த கழி

அ) 1, 2, 4, 3 ஆ) 2, 1, 3, 4 இ) 1, 3, 4, 2 ஈ) 4, 3, 2, 1

**விடை : அ) 1, 2, 4, 3**

34. பொருத்திக்காட்டுக

i) இளநீர் - 1. வாழைப்பிஞ்சு

ii) நுழாய் - 2. இளநெல்

iii) கருக்கல் - 3. இளம்பாக்கு

iv) கச்சல் - 4. முற்றாத தேங்காய்

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 4, 1 இ) 1, 2, 3, 4 ஈ) 3, 4, 2, 1

**விடை அ) 4, 3, 2, 1**

35. பொருத்திக்காட்டுக.

i) சிவியல் - 1. சூட்டினால் பழுத்த பிஞ்சு

ii) அளியல் - 2. பதராய்ப் போன மிளகாய்

iii) சொண்டு - 3. குளுகுளுத்த பழம்

iv) வெம்பல் - 4. சுருங்கிய பழம்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 1, 3, 4, 2 ஈ) 1, 3, 4, 2

**விடை அ) 4, 3, 2, 1**

36. ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களுக்கு எது அமைந்திருக்கும்?

அ) அன்பொழுக்கம் ஆ) அறிவொழுக்கம்

இ) களவொழுக்கம் ஈ) கற்பொழுக்கம்

**விடை : ஆ) அறிவொழுக்கம்**

37. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?

அ) தேவநேயப் பாவாணர் ஆ. வெள்ளை வாரணார்

இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார்

**விடை : அ. தேவநேயப் பாவாணர்**

38. உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?

அ) தனிநாயகம் அடிகள் ஆ) தேவநேயப் பாவாணர்

இ) இளங்குமரனார் ஈ) மு.வரதராசனார்

**விடை : ஆ. தேவநேயப் பாவாணர்**

39. போர்ச்சுகீச நாட்டின் தலைநகர் எது?

அ) லெபனான் ஆ) லிசுபன் இ. கொய்ரோ ஈ) ஹராரே

**விடை : ஆ) லிசுபன்**

40. இந்திய மொழிகளிலேயெ மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி எது?

அ) ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்

அ) நான்காம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்

இ) செம்மொழி மாநாட்டு மலர்

ஈ) தமிழிலக்கிய வரலாறு

**விடை அ) ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்**

42. கொழுந்தாடை என்பது யாது?

அ) நெல், புல் ஆகியவற்றின் கொழுந்து

ஆ) புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து

இ) தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து

ஈ) கரும்பின் நுனிப்பகுதி

**விடை ஈ) கரும்பின் நுனிப்பகுதி**

## குறுவினா

1. **தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?**
   தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி
2. **தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**
   கவை, கொம்பு, கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சி, இணுக்கு
3. **தாவரங்களின் காய்ந்த பகுதிகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**
   சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை
4. **தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**
   இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு
5. **தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் யாவை? ( கொழுந்து வகை)**
   - துளிர் அல்லது தளிர்
   - குருத்து
   - முறி அல்லது கொழுந்து
   - கொழுந்து தாடை
6. **பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**
   அரும்பு, போது, மலர், வீ, செம்மல்
7. **தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**
   பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, முசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல்
8. **தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?**
   கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு
9. **கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் சொற்கள் யாவை?**
   சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு, தேரைக்காய், அல்லிக்காய், ஒல்லிககாய், கோட்டான்காய் (அ) கூகைக்காய்
10. **பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?**
    தோலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை
11. **தானியங்களுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**
    கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை
12. **தாவரங்களின் இளமைப் பெயர்களை எழுது**
    நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, பைங்கூழ், மடலி (அ) வடலி

13. **கோதுமையின் வகைகளில் சிலவற்றைக் கூறு.**

சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை

14. **சம்பா நெல் வகைகளை எழுதுக**

ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன்சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது வகைகள் சம்பாவில் உள்ளன.

15. **இரா. இளங்குமரனாரின் தமிழ்ப்பணியைத் தரம் உயர்த்திய நல்முத்துகள் யாவை?**

- இலக்கண வரலாறு
- தமிழிசை இயக்கம்
- தனித்தமிழ் இயக்கம்
- பாவாணர் வரலாறு
- குண்டலகேசி உரை
- யாப்பருங்காலம் உரை
- புறத்திரட்டு உரை
- திருக்குறள் தமிழ் மரபுரை
- காக்கைப் பாடினிய உரை
- தேவநேயம்

முதலிய இரா. இளங்குமரனாரின் தமிழ்ப்பணியைத் தரம் உயர்த்திய நல்முத்துகளாகும்.

16. **உலகத்தமிழ் மாநாடு குறித்து க.அப்பாத்துரையார் கூறுவன யாவை?**

"உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா. அம்மாநாட்டுக்குரிய முதல் மொழியும் தமிழே! என்று க. அப்பாத்துரையார் கூறுகின்றார்.

## சிறுவினா

1. **தேவநேயப் பாவாணர் பற்றி நீவீர் அறிந்தவற்றை எழுதுக**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | தேவநேயப் பாவாணர் |
| **சிறப்புப்பெயர்** | : | மொழிஞாயிறு |
| **படைப்புகள்** | : | இலக்கணக்கட்டுரைகள், மொழியாராய்ச்சிக் கட்டுரைகள், சொல்லாய்வுக் கட்டுரைகள் |
| **பணி** | : | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர், உலகத்தமிழ்க் கழகத்தலைவர் |

2. **இரா. இளங்குமரனார் பற்றி நீவீர் அறிந்தவற்றை எழுதுக**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | இரா. இளங்குமரனார் |
| **தமிழ்ப்பற்று** | : | விழிகளை இழக்க நேரிட்டால்கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது |
| **திரு.வி.க.வழி** | : | தமிழ்த்தென்றல் திரு.வி.க.போல் இமைகளை மூடிய படி எழுதும் ஆற்றலைக் கொண்டவர் |
| **சிறந்த நூல்கள்** | : | இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ்இயக்கம் பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, திருக்குறள் தமிழ், மரபுரை, புறந்திரட்டு உரை, காக்கைப்பாடினிய உரை, தேவநேயம். |
| **பிறசெய்திகள்** | : | திருவள்ளுவர் தவச்சாலை மற்றும் பாவாணர் நூலகத்தை அமைத்தார். |

3. கார்டிலா நூல் குறிப்பு வரைக.

- 1554 –ல் போர்ச்சுகீசு நாட்டில் தமிழில் முதன்முதலில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்.
- ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்ட நூல்
- இதனை Carthila de lingoa Tamul e Portugues என்பர்
- இந்திய மொழிகளுள் மேலை நாட்டு மொழிகளுள் அச்சிடப்பட்ட முதல் தமிழ் மொழி நூலே.

4. எந்தெந்தத் தாவரங்களின் அடிப்பகுதி என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகிறது எனப் பட்டியலிடுக.

- தாள் - நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
- தண்டு - கீரை, வாழையின் அடி
- கோல் - நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி
- தூறு - குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
- தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
- கழி - கரும்பின் அடி
- கழை - மூங்கிலின் அடி
- அடி - புளி, வேம்புவின் அடி

5. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களையும் அவை தாவரங்களின் எப்பகுதிக்குப் பொருந்தும் என்பதையும் எழுது

- கவை - மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- கொம்பு (அ) கொப்பு - சுவையின் பிரிவு
- கிளை - கொம்பின் பிரிவு
- சினை - கிளையின் பிரிவு
- போத்து - சினையின் பிரிவு
- குச்சி - போத்தின் பிரிவு
- இணுக்கு - குச்சின் பிரிவு

6. எந்தெந்த தாவரங்களின் இலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதைப் பட்டியலிடுக.

- புளி, வேம்பு - இலை
- தென்னை, பனை - ஓலை
- நெல், புல் - தான்
- காய்ந்த இலை - சருகு
- சோளம், கரும்பு - தோகை

7. தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் பெயர்களையும் அவை எத்தாவரப் பிஞ்சுகளுக்குப் பொருந்தும் என்பதையும் கூறு

(பூம்பிஞ்சு – பூவோடு கூடிய இளம்பிஞ்சு - இளம்காய்)

- வடு - மாம்பிஞ்சு
- மூசு - பலாப்பிஞ்சு
- கவ்வை - எள் பிஞ்சு
- குரும்பை - தென்னை, பனை பிஞ்சு
- இளநீர் - முற்றாத தேங்காய்
- நுழாய் - இளம்பாக்கு
- கருக்கல் - இளநெல்
- கச்சல் - வாழைப்பிஞ்சு

8. எந்தெந்தத் தாவரங்களின் குலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனப் பட்டியலிடுக.

- கொத்து - அவரை, துவரை
- குலை - கொடி முந்திரி
- தாறு - வாழைக்குலை
- கதிர் - கேழ்வரகு, சோளக்கதிர்
- அலகு(அ) குரல் - நெல், தினைக்கதிர்
- சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி

9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் பெயர்கள் யாவை?

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் (அ) கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய்
- சொண்டு - பதறாய்ப் போன மிளகாய்
- கோடான்காய் (அ) கூகைக்காய் - கோட்டான் அமர்ந்ததினால் கெட்ட காய்
- தேரைக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்ட காய்
- அல்லிக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
- ஒல்லிக்காய் - தென்னையில் கெட்ட காய்

10. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க அவற்றின் தன்மைக்கேற்ப தாவரங்களுக்கு வழங்கப்படும் சொற்களை எழுதுக.

- தொலி - மிக மெல்லியது
- தோல் - திண்ணமானது
- தோடு - வன்மையானது
- ஓடு - மிக வன்மையானது
- குடுக்கை - சுரையின் ஓடு
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- உமி - நெல், கம்பு ஆகியவற்றின் மூடி
- கொம்மை - வரகு, கேழ்வரகு உமி

11. தானியங்களுக்குத் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் சொற்கள் யாவை?

- கூலம் - நெல், புல் தானியங்கள்
- பயறு - அவரை, உளுந்து
- கடலை - வேர்க்கடலை
- விதை - கத்தரி மிளகாய் வித்து, கொண்டைக்கடலை
- காழ் - புளி, காஞ்சிரை வித்து
- முத்து - வேம்பு, ஆமணக்கு வித்து
- கோட்டை - மா, பனை வித்து
- தேங்காய் - தென்னை வித்து
- முதிரை - அவரை, துவரை பயறுகள்

Next Generation School

**12. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுது.**

- ☞ நாற்று - நெல், கத்திரியின் இளநிலை
- ☞ கன்று - மா, புளி, வாழையின் இளநிலை
- ☞ குருத்து - வாழையின் இளநிலை
- ☞ பிள்ளை - தென்னையின் இளநிலை
- ☞ குட்டி - விளாவின் இளநிலை
- ☞ மடலி (அ) வடலி - பனையின் இளநிலை
- ☞ பைங்கூழ் - நெல், சோளத்தின் இளநிலை

**13. தமிழ்ச் சொல்வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக**

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது தமிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.

**14. எவற்றை அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்?**

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பகுபாடு செய்து அவற்றிற்கேற்ப பருப்பொருட் சொற்களும் நுண்பொருட்சொற்களும் அமைத்துக்கொள்வது சிறந்த மதி நுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

**15. பழங்காலத்தில் விளைந்த அளவு இக்காலத்தில் விளையாதவை எவை? விளைந்து வருபவை எவை?**

பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும், மணியும், முத்தும், பவளமும் இன்று விளையாடவிடினும் அருமையான கூலங்களும் சிறுகூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்த வருகின்றன.

Next Generation School

பாடம் - 3

# இரட்டுற மொழிதல்

## பலவுள் தெரிக

1. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**(விடை: அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்)**

## குறுவினா

1. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி என்பர். இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர்.

எ.கா: சீனிவாசன் பாற்கடலில் துயில்கொள்கிறான்.

இத்தொடர் எவ்வித மாற்றமுமின்றி இரண்டு விதமான பொருளைத் தருகிறது.

- சீனியில் (சர்க்கரை) வாசம் செய்யும் எறும்பு பாலில் இறந்து மிதக்கிறது.
- சீனிவாசகனாகிய திருமால் பாற்கடலில் துயில்கொள்கிறார்.

## சிறுவினா

1. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம்,பாஞ்ச சன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலமும் மேவதால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ‘தமிழ், ஆழி இரண்டுக்கும் பொருள்படும் படியான’ - இரட்டுற மொழிதலணி அமைய பாடிய ஆசிரியர் யார்?
அ) தேவநேயப் பாவாணர் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) தமிழழகனார் ஈ) எழில் முதல்வன்
**(விடை: இ) தமிழழகனார்)**

2. கடல் தரும் சங்குகளின் வகைகள் ________.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
**(விடை: ஆ) மூன்று)**

3. கடல் தன் அலையால் எதைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது?
அ) மணல் ஆ) சங்கு இ) கப்பல் ஈ) மீனவர்கள்
**(விடை: ஆ) சங்கு)**

4. முத்தினையும் அமிழ்தினையும் தருவதாகச் சந்தக்கவிமணி தமிழழகனார் குறிப்பிடுவது எதை?
அ) மூங்கில் ஆ) கடல் இ) மழை ஈ) தேவர்கள்
**(விடை: ஆ) கடல்)**

5. தமிழ் அணிகலன்களாகப் பெற்றவை ________.
அ) சங்க இலக்கியங்கள் ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்
இ) ஐஞ்சிறு காப்பியங்கள் ஈ) நீதி இலக்கியங்கள்
**(விடை: ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்)**

6. இரட்டுறமொழிதல் அணியின் வேறுபெயர் ________.
அ) வேற்றுமை அணி ஆ) பிறிதுமொழிதல் அணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) சிலேடை அணி
**(விடை: ஈ) சிலேடை அணி)**

7. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது எது?
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி
**(விடை: அ) இரட்டுறமொழிதல் அணி)**

8. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் ________.
அ) சண்முகமணி ஆ) சண்முகசுந்தரம்
இ) ஞானசுந்தரம் ஈ) ஆறுமுகம்
**(விடை: ஆ) சண்முகசுந்தரம்)**

9. தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்?
அ) பத்து ஆ) பன்னிரண்டு இ) பதினான்கு ஈ) பதினாறு
**(விடை: ஆ) பன்னிரண்டு)**

10. முத்தமிழ் துய்ப்பதால் என்னும் பாடல் இடம் பெற்றுள்ள தொகுப்பு யாது?

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) சிற்றிலக்கியங்கள் ஈ) தனிப்பாடல் திரட்டு

**(விடை: ஈ) தனிப்பாடல் திரட்டு)**

## குறுவினா

**1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

**2. கடலிலிருந்து கிடைக்கும் பொருட்கள் யாவை?**

- முத்தும், அமிழ்தமும் கிடைக்கிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள் கிடைக்கின்றன.

**3. தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது?**

- தமிழ் இயல், இசை, நாடகம் முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**4. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன, அதன் வேறுபெயர் யாது?**

- ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும்.
- வேறுபெயர் - சிலேடை அணி.

**5. சிலேடைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சிலேடைகள் இரண்டு வகைப்படும். அவை :

- செம்மொழிச் சிலேடை
- பிரிமொழிச் சிலேடை

Next Generation School

## பாடம் - 4 விரிவானம்

### உரைநடையின் அணிநலன்கள்

### கூடுதல்வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **முதல் தமிழ்க்கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு**
   அ) 1983 ஆ) 1938 இ) 1893 ஈ) 1980
   **(விடை: அ) 1983)**
2. **முதல் தமிழ்க் கணினிக்குச் சூட்டப்பட்ட பெயர்**
   அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர்
   இ) அகத்தியர் ஈ) கம்பர்
   **(விடை: அ) திருவள்ளுவர்)**
3. **புதிய உரைநடை என்னும் நூலினை எழுதியவர்**
   அ) க. அப்பாதுரை ஆ) எழில் முதல்வன்
   இ) பாவாணர் ஈ) இளங்குமரனார்
   **(விடை: ஆ) எழில் முதல்வன்)**
4. **எழில் முதல்வனின் இயற்பெயர்**
   அ) மா. இராமலிங்கம் ஆ) க. அப்பாதுரை
   இ) பாவாணர் ஈ) இளங்குமரனார்
   **(விடை: அ) மா. இராமலிங்கம்)**
5. **எழில் முதல்வனின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்**
   அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்
   இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும்
   **(விடை: அ) புதிய உரைநடை)**
6. **எழில் முதல்வன் கற்றல் கற்பித்தல் பணியை மேற்கொண்ட கல்லூரி**
   அ) புதுக்கல்லூரி ஆ) மாநிலக் கல்லூரி
   இ) இராணி மேரிக்கல்லூரி ஈ) குடந்தை அரசு ஆடவர் கல்லூரி
   **(விடை: ஆ) மாநிலக் கல்லூரி)**
7. **சங்கப் புலவரிடம் இணையத் தமிழன் எவ்விலக்கியங்களைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தான்?**
   அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
   இ) உரைநடை இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்
   **(விடை: இ) உரைநடை இலக்கியம்)**

8. **“உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அது உருவகமாகும்“ - என்றவர்**

அ) தொல்காப்பியர் ஆ) பவணந்தியார்

இ) தண்டி ஈ) அகத்தியர்

**(விடை: இ) தண்டி)**

9. **“இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர் நிறைந்த கண்மாய்கள்“ என்று குறிஞ்சிமலர் நூலில் நா. பார்த்தசாரதி பயன்படுத்திய நயம்.**

அ) உவமை ஆ) உருவகம்

இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) சிற்றிலக்கியம்

**(விடை: அ) உவமை)**

10. **எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதனை எப்படி அழைப்பர்?**

அ) இலக்கணை ஆ) இணை ஒப்பு

இ) முரண்படு மெய்ம்மை ஈ) சொல்முரண்

**(விடை: ஆ) இணை ஒப்பு)**

11. **குடிசையின் ஒருபக்கம் கோபுரங்கள் மறுபக்கம்” பசித்த வயிறுகள் ஒரு பக்கம் புளிச் சேப்பக்காரர்கள் மறுபக்கம்” மெலிந்த எலும்புக் கூடுகள் ஒருபக்கம் பருத்த தொந்திகள் மறுபக்கம் - தோழர் ப. ஜீவானந்தம் உரைநடை எதற்கு எடுத்துக்காட்டு?**

அ) எதிரிணை இயைபு ஆ) முரண்படு மெய்ம்மை

இ) இலக்கணை ஈ) சொல்முரண்

**(விடை: அ) எதிரிணை இயைபு)**

## நெடுவினா

**ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**பங்குபெறுவோர் - தமிழன், உறவினர் மகள்**

**உறவினர் மகள்** : வணக்கம் ஐயா.

**தமிழன்** : வணக்கம்

**உறவினர் மகள்** : உரையாடல், உரைநடை என்றால் என்ன?

**தமிழன்** : நீயும் நானும் பேசினால் உரையாடல். அதையே எழுதினால் உரைநடை.

**உறவினர் மகள்** : உரைநடை வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து யாது?

**தமிழன்** : உரைநடையில் எதுகை மோனை போன்ற அணிகளோ இல்லை. ஆனால் அடுக்கு மொழிகள் உண்டு. கவிதையானது செயற்கைத் தன்மை கொண்டது. உரைநடையோ இயல்பான ஒழுங்கில் அமையும்.

**உறவினர் மகள்** : தமிழ் உரைநடையின் வேறு வகைகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. பொதுவாக உரைநடையினை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். விளக்க உரைநடை, அளவை உரைநடை, எடுத்துரை உரைநடை, வருணனை உரைநடை, நாடக உரைநடை, சிந்தனை உரைநடை.

**உறவினர் மகள்** : எனக்கு வருணனை உரைநடையைப் பற்றி கூற முடியுமா?

**தமிழன்** : கூறுகிறேன். வருணனை உரைநடை என்பது புலனுணர்வு அனுபவங்களை வருணனையாக விவரிப்பது. மக்கள், உயிரினங்கள், பொருள்கள் ஆகியவற்றை வருணிப்பது.

**உறவினர் மகள்** : உரைநடையில் ஓசை இன்பம் ஏற்படுமா?

**தமிழன்** : எதுகை, மோனைச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி உரையாசிரியர்கள் பலர் உரையெழுதி உள்ளனர். எடுத்துக்காட்டாக இரா. பி. சேதுபிள்ளையின் தமிழின்பம் என்னும் நூலைக் கூறலாம்.

**உறவினர் மகள்** : உரைநடையில் இலக்கிய உத்திகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. மு.வ. உரைநடையில் உவமை, எதுகை, மோனை சொல்லாட்சி போன்ற நான்கு உலக உத்திகளைக் கையாண்டுள்ளார்.

**உறவினர் மகள்** : உரைநடையில் மோனை நயம் உள்ளதா?

**தமிழன்** : உள்ளது. சான்றாக, இரா.பி. சேதுபிள்ளையின் ‘தமிழ்விருந்து’ என்னும் நூலில் ‘கலையும் கற்பனையும்‘ என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

‘**ம**லையிலே **ம**ழை **பொ**ழிந்து வெள்ளம் **பொ**ங்கி எழுகின்றது. **அ**ருவியாய் விழுந்து **ஆ**றாய் பாய்கிறது‘ என்பதை அறிய முடிகிறது.

**உறவினர் மகள்** : மோனையும், இயைபும் வருவதுபோல் உரைநடை சொல்லுங்கள் ஐயா

**தமிழன்** : சொல்கிறேன். இரா.பி.சேதுபிள்ளையின் ‘உமறுப்புலவர்‘ எனும் கட்டுரையில், **பா**ண்டிய நாட்டில் **ப**ருவமழை பெய்யா**து** ஒழிந்த**து**, **ப**ஞ்சம் வந்தது, பசி நோயும் மிகுந்த**து**.

**உறவினர் மகள்** : ஐயா கடைசியாக, முரண் நயம் பற்றி மட்டும் கூறுங்கள் ஐயா!

தமிழன் : முரண் என்பது முரண்பட்ட இரண்டுச் சொற்கள் அருகருகே அடுக்கி வருதல். இரா.பி.சேதுபிள்ளையின் ‘ஊரும் பேரும்’ என்னும் நூலில், வாழ்வும் தாழ்வும் நாடு நகரங்களும் உண்டு. சீரும் சிறப்பும் உற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் புகைபடிந்த ஓவியங்கள் போல் பொலிவிழந்து உள்ளது.

உறவினர் மகள் : மிக்க நன்றி ஐயா. தங்களிடமிருந்து உரைநடையின் சிறப்பினை நன்கு அறிந்து கொண்டேன்.

தமிழன் : வணக்கம்.

## பாடம் - 5 கற்கண்டு

### எழுத்து, சொல்

**பலவுள் தெரிக**

1. **‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது” – தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**விடை : பாடல்; கேட்டவர்**

**குறுவினா**

1. **‘வேங்கை’என்பதைத் தொடர் மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டு**

அ) வேங்கை : வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (தனிமொழி)

வேம் + கை : வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது (தொடர்மொழி)

2. **‘உடுப்பதூஉம் உண்பதூம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்’**
**இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டிக்காட்டி, அதன் இலக்கணம் தருக.**

அ) உடுப்பதூஉம் உண்பதூம் இன்னிசை அளபெடை வந்துள்ளது

ஆ) செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

**சிறுவினா**

1. **'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' ,**

இவை அனைத்தையும் யாம் அறிவோம், அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை எல்லாம் எமக்குத் தெரியும்.

இக்கூற்றில்

வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

| தொழிற்பெயர் | எதிர்மறைத்தொழிற்பெயர் |
|---|---|
| அறிதல்<br>புரிதல்<br>தெரிதல்<br>பிறத்தல் | அறியாமை<br>புரியாமை<br>தெரியாமை<br>பிறவாமை |

**பலவுள் தெரிக**

1. **குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்?**

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு

**விடை : ஆ) நான்கு**

2. **எ:.:.கிலங்கிய உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை

**விடை : அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**

3. **ஒற்றளபெடையில் அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?**

அ) 11 ஆ) 13 இ) 15 ஈ) 12

**விடை : அ) 11**

4. **பொருத்துக.**

i) ஓ ஒதல் வேண்டும் - 1. இன்னிசை அளபெடை

ii) கெடுப்பதூஉம் - 2. செய்யுளிசை அளபெடை

iii) உரனசைஇ - 3. ஒற்றளபெடை

iv) எ:.:.கிலங்கிய - 4. சொல்லிசை அளபெடை

அ) i 2 ii 1 iii 4 iv 3 ஆ) i 4 ii 3 iii 3 iv 1

இ) i 2 ii 3 iii 4 iv 1 ஈ) i 3 ii 4 iii 1 iv 2

விடை : அ) **i 2 ii 1 iii 4 iv 3**

5. **வேறுபட்ட ஒன்றினைத் தேர்வு செய்க.**

அ) உறாஅர் ஆ) கெடுப்பதூஉம்

இ) வரனசைஇ ஈ) எ.்..்.கிலங்கிய

**விடை : ஈ) எ.்..்.கிலங்கிய**

6. **பொருத்தமற்ற ஒன்றினைத் தேர்வு செய்க**

அ) ஓஓதல் ஆ) உறாஅர்க்கு இ) படாஅபறை ஈ)தம்பீஇ

**விடை : ஈ) தம்பீஇ**

7. **பொது மொழிக்குரிய சான்றினைத் தேர்வு செய்க**

அ) படி ஆ) வேங்கை இ) கண்ணன் ஈ) கண்ணன் வந்தான்

**விடை: ஆ) வேங்கை**

8. **எட்டு = எள் + து எனப் பிரிந்து தரும் பொருள்**

அ) எட்டு ஆ) எள்ளைஉண் இ) வேகின்ற கை ஈ) எள்ளைஎடு

**விடை : ஆ) எள்ளைஉண்**

9. **பொருத்துக**

1. நடத்தல் - அ) எதிர்மறைத்தொழிற்பெயர்
2. கொல்லாமை - ஆ) வினையாலணையும் பெயர்
3. கேடு - இ) தொழிற்பெயர்
4. வந்தவர் - ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4..இ ஆ) 1.இ 2.அ 3.ஈ 4..ஆ

இ) 1.இ 2.ஆ 3.ஈ 4.அ ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ

**விடை : ஆ) 1.இ 2.அ 3.ஈ 4..ஆ**

10. **எதிர்மறைத்தொழிற்பெயர் சான்றினைத் தேர்ந்தெடுக்க**

அ) கொல்லாமை ஆ) வாழ்க்கை இ) நடத்தல் ஈ) சூடு

**விடை : அ) கொல்லாமை**

11. **மொழியின் சிறப்புகளை அறிய துணை செய்வது**

அ) கவிதை ஆ) இலக்கணம் இ) உரைநடை ஈ) எதுவுமில்லை

**விடை : ஆ) இலக்கணம்**

12. **சார்பெழுத்துகளின் எண்ணிக்கை**

அ) முப்பது ஆ) பன்னிரண்டு இ) பத்து ஈ) ஒன்பது

**விடை : இ) பத்து**

13. **உயிரளபெடை எத்தனை வகைப்படும்?**

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

**விடை : ஆ) மூன்று**

14. **நெட்டெழுத்து அளபெடுப்பது என்பது என்ன?**

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) எதுவுமில்லை

**விடை : அ) செய்யுளிசை அளபெடை**

15. **சொல் திரிந்து அளபெடுப்பது என்பது யாது?**

அ) செய்யுளிசை அளபெடை ஆ. சொல்லிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) எதுவுமில்லை

**விடை : ஆ. சொல்லிசை அளபெடை**

16. மொழி என்பது எத்தனை வகை?

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

**விடை : ஆ) மூன்று**

17. **"அந்தமான்" என்பது எவ்வகை மொழி?**

அ) தொடர் மொழி ஆ) தனி மொழி

இ) பொது மொழி ஈ) எதுவுமில்லை

**விடை : இ) பொது மொழி**

18. **பொருத்திக்காட்டுக**

1. அந்தமான் - அ) தொடர்மொழி
2. கண் - ஆ) தொழிற்பெயர்
3. நடத்தை - இ) பொதுமொழி
4. கண்ணன் வந்தான் - ஈ) தனிமொழி

அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ ஈ) 1.இ 2.ஆ 3.ஈ 4.அ

**விடை : இ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ**

19. **உறாஅர்க்கு, வரனசைஇ - அளபெடை வகை**

அ) சொல்லிசை, இன்னிசை ஆ) ஒற்றளபெடை, சொல்லிசை

இ) செய்யுளிசை, சொல்லிசை ஈ) இன்னிசை, சொல்லிசை

**விடை : இ) செய்யுளிசை, சொல்லிசை**

20. **தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**

அ) தொழிற்பெயர்

ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

ஈ) வினையாலணையும் பெயர்

**விடை : ஈ) வினையாலணையும் பெயர்**

21. **மூவிடத்திற்கும் உரியது __________ படர்க்கைக்கே உரியது __________.**

அ) தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்

ஆ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்

இ) உரிச்சொற்றொடர், வினையாலணையும் பெயர்

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : ஆ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்**

22. **'நடத்தல்' என்னும் சொல்லில் 'நட' என்பது**

அ) வினையடி ஆ) விகுதி இ) தொழிற்பெயர் ஈ) இடைநிலை

**விடை: அ) வினையடி**

23. **'வேம் + கை' என்பதன் பொருள்**

அ) வேட்கை ஆ) வேங்கை இ) வேகின்ற கை ஈ) வேகாத கை

**விடை : ஈ) வேகாத கை**

24. **'வாழ்க்கை' என்னும் சொல்லுக்குரிய விகுதியைக் குறிப்பிடுக.**

அ) வாழ் ஆ) க் இ) கை ஈ) ஐ

**விடை : இ) கை**

25. அளபெடுத்தல் என்பதன் பொருள்

அ) நீண்டு ஒலித்தல் ஆ) குறுகி ஒலித்தல்

இ) அளவாக ஒலித்தல் ஈ) ஒலித்தல் இல்லை

**விடை: அ) நீண்டு ஒலித்தல்**

26. 'நசைஇ' என்பதன் பொருள்

அ) விருப்பம் ஆ) விரும்பி இ) துன்பம் ஈ) கவனித்து

**விடை : ஆ) விரும்பி**

## குறுவினா

**1. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்துகள் பத்து வகைப்படும் அவை:

- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலுகரம்
- குற்றியலுகரம்
- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக்குறுக்கம்

**2. குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்?**

குறுக்கங்கள் நான்கு வகைப்படும். அவை:

- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக்குறுக்கம்

**3. அளபெடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

அளபெடை இரண்டு வகைப்படும் அவை : உயிரளபெடை, ஒற்றளபெடை

**4. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

உயிரளபெடை மூன்று வகைப்படும்

அவை : செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

**5. உயிரளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

✡ செய்யுளில் ஓசை குறையும்போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும்

✡ அளபெடுக்கும்போது அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் பக்கத்தில் வரும்

✡ சான்று : உழாஅர்

**6. செய்யுளிசை அளபெடை - இசைநிறை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

➢ செய்யுளின் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுக்கும் (ஈரசை கொண்ட சீர்களில் மட்டும் வரும்)

➢ சான்று : உழாஅர் ( உழா/அர்)

7. **செய்யுளிசை அளபெடைக்கு மூன்று சான்று தருக.**

- ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
- உறாஅர்க்கு உறுநோய் - மொழி இடை
- நல்லபடாஅ பறை - மொழி இறுதி

8. **இன்னிசை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

♣ செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

♣ சான்று : கெடுப்பதூஉம் (கெடுப்/பதூ/உம்)

(மூவசை கொண்ட சீர்களில் மட்டும் வரும்)

9. **சொல்லிசை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

❖ செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச்சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசையளபெடை ஆகும்.

❖ **சான்று** : வரனசைஇ, உரனசைஇ

10. **ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

✦ செய்யுளில் ஒசை குறையும் போது அதனை நிறைவு செய்ய சில மெய்யெழுத்துகளும், ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடையாகும்

✦ சான்று : எ·்·்கிலங்கிய, எங்ங்கிறைவன்

11. **ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து ஆகியவற்றை எழுதுக.**

☞ மெய் எழுத்துகள் - ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் (பத்து)

☞ ஆய்த எழுத்து - ∴ (ஒன்று)

☞ மொத்த எழுத்துகள் - 11

12. **சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருமாயின் அது சொல் எனப்படும்

(சொல்லின் வேறுபெயர்கள் - பதம், மொழி, கிளவி )

13. **மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மொழி மூன்று வகைப்படும் அவை

தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

**14. தனிமொழி என்றால் என்ன? சான்று தருக.**

- ✦ ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி எனப்படும்
- ✦ **சான்று** : கண், படி

**15. தொடர் மொழி என்றால் என்ன? சான்று தருக.**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர் மொழி ஆகும்.
- **சான்று** : கண்ணன் வந்தான்

**16. பொதுமொழி என்றால் என்ன ? சான்று தருக**

- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும்.
- **சான்று** : எட்டு

எட்டு – எண்ணைக்குறிக்கிறது. எள் + து – எள்ளை உண்

**17. தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாக உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.
- எ.கா: ஈதல், வாழ்க்கை

**18. விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால்என்ன? சான்று தருக.**

- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.
- சான்று : நடத்தல். நட - வினையடி, தல் - விகுதி

**19. எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.
- சான்று : நடவாமை, கொல்லாமை

**20. தொழிற்பெயர் எத்தனை வகைப்படும்? அவையாவை?**

தொழிற்பெயர் இரண்டு வகைப்படும். அவை

- ✦ முதனிலைத் தொழிற்பெயர்
- ✦ முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

**21. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற் பெயராகும்.

சான்று: தட்டு, உரை, அடி

இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும் போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**22. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக**

முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்பது விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

சான்று : கெடு – கேடு, சுடு - சூடு

**23. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? சான்று தருக**

வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிக்கும்

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடியும்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

மூன்று காலங்களிலும் வரும்

சான்று : வந்தவர்.

**24. தொழிற்பெயருக்கும், வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறு.**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலைக் குறிக்கும் | தொழில் செய்யும் கர்த்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | மூவிடத்திலும் வரும் |
| எ.கா. பாடுதல், படித்தல் | எ.கா. பாடியவள், படித்தவர் |

## சிறுவினா

**1. மொழியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**மொழிவகைகள் :**

மூன்று வகைப்படும்.

**அவை : தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பன.**

**தனிமொழி:**

ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி எனப்படும்.

எ.கா. கண், மரம்.

**தொடர்மொழி:**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.

எ.கா.: கண்ணன் வந்தான்

**பொதுமொழி:**

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும்.

தனிமொழிக்கும், தொடர் மொழிக்கும் பொதுவாய் அமையும்

**சான்று** : எட்டு

எட்டு – எண்ணைக்குறிக்கிறது எள் + து – எள்ளைஉண்

2. **சொல்லின் செயல்களைக் குறிப்பிடுக.**

- இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்
- மூவகை இடங்களிலும் வரும்
- உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
- வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| | | | |
|---|---|---|---|
| கல் | - | குவியல் | (கற்குவியல்) |
| பழம் | - | குலை | (பழக்குலை) |
| புல் | - | கட்டு | (புற்கட்டு) |
| ஆடு | - | மந்தை | (ஆட்டுமந்தை) |

## கட்டுரை எழுதுக

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு **'சான்றோர் வளர்த்த தமிழ்'** என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Next Generation School

குறிப்புச் சட்டம்

முன்னுரை
சங்கத்தமிழ்
அறத்தமிழ்
காப்பியத்தமிழ்
சிற்றிலக்கியம்
சமயத்தமிழ்

**முன்னுரை:**

**“ சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா“**

உலகில் மனித இனம் என்று தோன்றியதோ, அன்றே தமிழ் மொழியும் தோன்றியது. அன்று முதல் இன்று வரை தமிழ்மொழி இளமையாகவே இருந்து வருகின்றது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாழ்ந்த சான்றோர்களால் தமிழ் சிறப்புற்று நிற்கின்றது.

**சங்கத்தமிழ்:**

‘தமிழ்’ என்ற சொல் தொல்காப்பியப் பாயிரத்தில் இடம்பெறுகின்றது. கிபி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவையே சங்கத்தமிழ் தரும் களஞ்சியம் ஆகும். கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர், நல்லந்துவனார் முதலிய எண்ணற்றத் தமிழ்ச்சான்றோர்களால் பாட்டும் தொகையும் உருவாக்கப்பட்டு சங்கத்தமிழ் வளர்க்கப்பட்டது.

**அறத்தமிழ்** :

சங்ககாலத்திற்குப் பின் தோன்றிய காலத்தில் பொய்யும் குற்றமும் தோன்ற ஆரம்பித்தது. அதனைப்போக்க திருவள்ளுவர், சமண முனிவர்கள், விளம்பிநாகனார், கபிலர், கணிமேதாவியார் ஆகிய பலசான்றோர் பெருமக்கள் அறநூல்களைப் படைத்து, அறத்தமிழை வளர்த்தனர்.

**காப்பியத்தமிழ்** :

ஐம்பெருங்காப்பிங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களும் காப்பியத் தமிழை வளர்த்தன. இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், திருத்தக்கத்தேவர் ஆகிய சான்றோர்கள் காப்பியத் தமிழைத் தழைக்கச் செய்தனர்.

**சிற்றிலக்கியம்:**

(பரணி, சதகம், பிள்ளைத்தமிழ்)

சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். அவை வழி சிற்றிலக்கிய வகைகள் பெருகி சிற்றிலக்கியத்தமிழை வளர்த்தனர். ஒருவரைக் குழந்தையாகப் பாவித்து, 10 பருவங்களில் வளர்ச்சி நிலையைப் பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் பிள்ளைத்தமிழ் பாடி வளர்த்தனர். சதகம்

(100) பாடல்களைக் கொண்டது சதகம். ஆத்மநாத தேசிகர், கார்மேகக் கவிஞர் ஆகியோர் சதகம் பாடினார். ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் பரணி இலக்கியத்தை வளர்த்தனர்.

**சமயத்தமிழ்:**

சைவம், வைணவம், கிறித்தவம், இஸ்லாம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு சமயத்தமிழை வளர்த்தனர். திருநாவுக்கரசர், வீரமாமுனிவர், உமறுப்புலவர் ஆகியோர் சமயத்தமிழை வளர்த்தனர். இதற்கு பன்னிரு திருமுறைகள், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், சீறாப்புராணம், தேம்பாவணி சான்றாகும்.

**முடிவுரை:**

காலந்தோறும் தமிழ், தன்னை வளர்ப்பவர்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்தும் சிறந்தும் வருகின்றது என்பதை இலக்கிய வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன.

"தமிழுயரத் தமிழன் உயர்வான்
தமிழயரத் தமிழன் அயர்வான்"

**எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**


| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை நான்கு | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

**அகராதியில் காண்க.**

**அடவி, அவல், சுவல், செறு, பழனம், புறவு**

அடவி - காடு, திரள், தொகுதி, சோலை
அவல் - பள்ளம், விளைநிலம், குளம், நெல் இடியல்
சுவல் - பிடரி, முதுகு, மேடு, தொல்லை
செறு - வயல், குளம், பாத்தி, கோபம்
பழனம் - வயல், மருதநிலம், பொய்கை
புறவு - புறா, சிறுகாடு, முல்லைக்கொடி, பயிரிடும் நிலம்.

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல
நாள்தோறும் எதை எதையோ எண்ணி
உனது பெருமைகளை இழக்கிறாய்.
காரணம் உன் அறிவுப்பூட்டு
இன்னும் திறக்கப்படாததே!
உன் அறிவுப்பூட்டைத் திற
வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான
செயல்களில் ஈடுபடு
உன் உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வின் உயர்விடத்தில் இருப்பாய் நீ !

Next Generation School